## மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல்கள்

## பருவம் I, 2020/2021

## கலைப் பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்

### பரீட்சைகளுக்கு முன்னர் (Pre-Examination)

- அனைத்து மாற்றுத்திறனாளி மாணவர்களும் நிகழ்நிலைத் தளத்தினூடாக (online) பரீட்சைக்கு அமரலாம் அல்லது கலைப் பீடத்திற்கு வருகை தந்து பரீட்சை எழுதுவதற்குரிய வசதிகளைப் பயன்படுத்தலாம்.
- நிகழ்நிலைத் தளத்தில் (online) அல்லது கலைப் பீடத்திற்கு வருகை தந்து பரீட்சைகளுக்கு அமரும் அனைத்து மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கும் தங்களது விடைத் தாள்களினைச் சமர்ப்பிப்பதற்கு ஒரு வாரம் வழங்கப்படும். உதாரணமாக உமக்கு 21 ஆம் திகதி ஒக்டோபர் 2021 பரீட்சை ஒன்று இருப்பின், நீர் 28 ஆம் திகதி ஒக்டோபர் 2021 க்கு முன்னர் எந்நேரத்திலும் சமர்ப்பிக்கலாம்.
- மாணவரொருவர் கலைப் பீடத்திற்கு வருகை தந்து பரீட்சை எழுத விரும்பினால், அவர்கள் பரீட்சைக்கு பத்து நாட்களுக்கு முன்னர் தமது கோரிக்கையைத் தெரிவிக்க வார நாட்களில் அலுவலக நேரங்களில் (காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை) 0112 580835/0702956565 என்ற CEDREP அலுவலகத் தொலைபேசி இலக்கத்திற்கு அழைக்க அறிவுறுத்தப்படுகிறார்கள். மாணவர்கள் பரீட்சையின் பொழுது அவர்களுக்குத் தேவைப்படும் உதவிகளைக் (வாசிப்பாளர்/ எழுதுநர்/ தொழில்நுட்ப உதவி) குறிப்பிட வேண்டும்.

### பரீட்சைகளின் பொழுது (During the Examination)

- தகவல் மற்றும் ஆவணப்படுத்தல் மையத்தினால் (Information and Documentation Centre - IDC) குறிப்பிடப்பட்ட இறுதி தினத்தினுள் மாணவர் தகவல் முறைமையினைப் (Student Information System - SIS) பயன்படுத்தி பரீட்சைகளுக்காகப் பதிவுசெய்தல் வேண்டும்.
- தகவல் மற்றும் ஆவணப்படுத்தல் மையத்தினால் (Information and Documentation Centre - IDC) பரீட்சை நேர அட்டவணை LMS தளத்தினூடாக மாணவர்களுடன் பகிரப்படும்.
- பதிவுசெய்த மாணவர்கள் அவர்களது அனுமதி அட்டைகளைப் பரீட்சைக் கிளையிலிருந்து அவர்களது SIS கணக்கில் பெற்றுக்கொள்வர். அனுமதி அட்டைகள் தொடர்பான ஏதேனும் சிக்கல்களுக்கு பரீட்சைக் கிளையின் பிரதி பதிவாளரை dr@exam.cmb.ac.lk என்ற மின்னஞ்சல் அல்லது 011 2500712 / 0112585972 என்ற தொலைபேசி இலக்கங்களின் ஊடாகத் தொடர்புகொள்ளவும்.

- மாணவர்கள் தமது அனுமதி அட்டையை SIS இல் இருந்து பதிவிறக்கம் செய்து, அதனை மென் பிரதிகளாகவும் (soft copy), வன் பிரதிகளாகவும் (hard copy) சேமித்து வைத்திருக்கவும்.
- மாணவர்கள் பரீட்சை அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள கால ஒழுங்கிற்கேற்ப ஒவ்வொரு பாடத்திற்குமான பரீட்சை வினாத்தாள்களைப் பதிவிறக்கம் செய்ய முடியும்.
- கையெழுத்து விடைத்தாள்களுக்குப் (**handwritting**) பதிலாக தட்டச்சு (type) செய்ய விரும்பும் மாணவர்கள் அதற்கு அனுமதிப்படுகின்றனர்.
- மாணர்கள் தமது பதில்களை எழுதுவதற்கு பிரெயில் எழுத்துக் கருவியையோ (braille writer) ஸ்லோட்களையோ (slate) பயன்படுத்த வேண்டாம் என அறிவுறுத்தப்படுகின்றார்கள். அவர்கள் பரீட்சையில் எழுதுதல் மற்றும் வாசிப்பதற்கான உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**விடைத்தாள்களைச் சமர்ப்பித்தல் (Submitting the Answer Script)**

- மாணவரொருவர் வீட்டிலிருந்து பரீட்சை எழுத விரும்பினால், அவர்கள் தமது விடைத் தாள்களினை கீழே கொடுக்கப்பட்டுள்ள பொருத்தமான மின்னஞ்சல் முகவரிக்கு தங்களது பாடநெறியின் குறியீடு மற்றும் சுட்டெண்ணினை மின்னஞ்சலின் தலைப்புப் பகுதியில் (subject section) குறிப்பிட்டு மின்னஞ்சல் செய்யலாம்.

| | |
|---|---|
| 1 ஆம் வருடம் | exam1@arts.cmb.ac.lk |
| 2 ஆம் வருடம் | exam2@arts.cmb.ac.lk |
| 3 ஆம் வருடம் | exam3@arts.cmb.ac.lk |
| 4 ஆம் வருடம் | exam4@arts.cmb.ac.lk |

- நீர் விடைத்தாள்களை மின்னஞ்சல் மூலமாக அனுப்பும் போது தகவல்களை தலைப்புப் பகுதியில் பின்வரும் ஒழுங்கு வரிசையில் உள்ளீடு செய்க. [பாடக் குறியீடு- Subject Code] [சுட்டெண்- Index No] [மேலதிக நேரம்- Extra Time].

  உதாரணமாக: INR1111 A12345 Extra Time
- மாணவர்கள் தமது விடைத்தாளுடன் அனுமதி அட்டையின் பிரதி ஒன்றையும் கட்டாயம் பதிவேற்ற வேண்டும். பதிவேற்றம் செய்யப்பட்ட அனுமதி அட்டை, குறித்த பாடப்பிரிவுக்கு தொடர்புடைய ஒவ்வொரு கூண்டிலும் பரீட்சார்த்தியின் கையொப்பத்தைத் தெளிவாகக் கொண்டிருக்க வேண்டும்.
- அனைத்து மாற்றுத்திறனாளி மாணவர்களும் விடைத்தாளுடன், LMS இல் அவர்களுக்கு வழங்கப்பட்ட பிரகடனப் படிவம் (declaration form)/ பொதுவான முதல் பக்கத்தைப் பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும்.

## பின்னிணைப்பு I

## மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கானப் பிரகடனப் படிவம்

**நான்காம் / மூன்றாம் / இரண்டாம் / முதலாம் / வருட கலைமாணிப் பரீட்சை**

**இரண்டாம் பருவம் - 2020/2021**

**கலைப் பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்**

பாடத் தலைப்பு -
பாடக் குறியீடு –

சுட்டெண் –

உதவியாளரின் பெயர்-

உதவியாளரின் தே. அ.அ. இல.

| வினா இல. | சொற்களின் எண்ணிக்கை / பக்கங்கள் |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |

விடைத்தாளின் மொத்தப் பக்கங்களின் எண்ணிக்கை -

சமர்ப்பிப்புத் திகதி –

**மாணவர் பிரகடனம்**

சரியான முறையில் பயன்படுத்தப்பட்ட (மேற்கோள்கள்) தவிர, இக்கணிப்பீடு எனது சொந்தப் படைப்பு என நான் பிரகடனப்படுத்துகின்றேன். மற்றொருவரின் படைப்பினை எனது சொந்தமாக சமர்ப்பிப்பது ஒரு பரீட்சைக் குற்றமாகக் கருதப்படும் என்பதை நான் புரிந்துகொள்கிறேன்.

……………………………………..

கையொப்பம்

**உதவி வழங்குனரின் பிரகடனம்**

இக்கணிப்பீட்டில் உள்ள விடைகள் மாணவனின் (சுட்டெண்) சொந்த எண்ணங்கள் / யோசனைகள் என நான் பிரகடனப்படுத்துகின்றேன். வினாப் பத்திரத்தை வாசிப்பற்கும், மாணவனின் பதில்களை எழுத்துப்பூர்வமாகப் பதிவுசெய்வதற்கும் மாத்திரமே நான் உதவி வழங்கியுள்ளேன் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

……………………………………..

கையொப்பம்